**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8075846

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம் : கடலூர் PS காவல்நிலையம் : ஊ.த.க. பிரிவு Year ஆண்டு : 2021 FIR No. மு.த.அ. எண் : 14/2021 Date நாள் : 30.10.2021

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Criminal Procedure Code, 1973 Sections பிரிவுகள்: 102
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் : 29.10.2021 15.15 hrs Date to நாள் வரை : 29.10.2021 19.00 hrs
Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : Time to நேரம் வரை :
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.10.2021 Time நேரம் : 1030 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - IV Time நேரம் : 1030 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 75 கி.மீ. தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி TASMAC கடை எண் 2441, காட்டுமன்னார்கோயில்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் --

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. அமுதா
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் –
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் ---
Place of Issue : வழங்கப்பட்ட இடம் ---
(f) Occupation : தொழில் துணை ஆய்வுக்குழு அலுவலர்,
(g) Address : முகவரி கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். (இருப்பு)

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) R.ரவிக்குமார், டாஸ்மாக் மாவட்ட மேலாளர், கடலூர் மாவட்டம்,
2) A.மதியழகன், மேற்பார்வையாளர், கடை எண்.2441, காட்டுமன்னார்கோயில்
3) P.அறிவழகன், விற்பனையாளர், கடை எண்.2441, காட்டுமன்னார்கோயில்
4) S.ரமேஷ், மேற்பார்வையாளர், கடை எண்.2439, காட்டுமன்னார்கோயில்
5) P.ரமேஷ், இளநிலை உதவியாளர், டாஸ்மாக் மாவட்ட மேலாளர் அலுவலகம், கடலூர் மாவட்டம்,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 30.10.2021 ந்தேதி காலை 10.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, அ.அமுதா, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்ட ஆட்சியரகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு; நாள் : 30.10.2021 அனுப்புநர் அ. அமுதா, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் (இருப்பு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் தாலுக்கா, காட்டுமன்னார்கோயில், TASMAC கடை எண்.2441 – திடீர் ஆய்வு சோதனை– உரிய சரியான முகாந்திரம் இன்றி கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் – திடீர் ஆய்வு மகஜரில்

(தொடர்ச்சி பக்கம் -3)

30/10/2021

E.S.T. MELWYN RAJASINGH

கைப்பற்றுதல் – ஒப்படைப்பு – நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் (இருப்பு) துணை ஆய்வுக்குழு அலுவலரான அ.அமுதா ஆகிய நான் நேற்று 29.10.2021ந்தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு எனது அலுவலகத்தில் இருக்கும்போது எனக்கு கிடைத்த தகவலின்படி கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் அருகாமையில் அருகே இயங்கி வரும் TASMAC கடை எண்.2441 அரசு மதுபான கடையில் மதுபான பாட்டில்கள் ஒவ்வொன்றுக்கும் அரசு நிர்ணயித்த விலையை விட கூடுதலாக ரூ.10/– முதல் ரூ.25/– வரை பாட்டில் வகைக்கேற்றவாறு விற்பதாகவும், மேலும் மாவட்ட மேலாளர், டாஸ்மாக், கடலூர் மாவட்டம் என்பவர் அந்த கடைக்கு சென்று பார்வையிட்டு, மதுபாட்டில்கள் இருப்பு மற்றும் விற்பனை சம்மந்தமாக தணிக்கை செய்யவிருப்பதாகவும், அவர் பல்வேறு கடைகளில் தணிக்கை சம்மந்தமாக லஞ்ச பணம் பெறுவதாகவும் தகவல் கிடைக்கப்பெற்றது. மேற்சொன்ன தகவலை பெற்று உடன் நான் நேற்று 29.10.2021 பகல் சுமார் 12.30 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, கடலூர் அலுவலகத்திற்கு நேரில் சென்றேன். நிலையத்தில் இருந்த தங்களிடம் மேற்சொன்ன தகவலை தெரிவித்தும், திடீர் ஆய்வு மேற்கொள்ள இருப்பதை தெரிவித்தும், திடீர் ஆய்வு மதியம் சுமார் 03.00 மணிக்கு செய்யலாம் எனவும், அதற்கு உதவியாக அவரை இருக்கும்படி கேட்டுக்கொண்டேன். உடன் அவருக்கு கீழ் பணிபுரியும் காவல் ஆளிநர்களை தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தினார். தொடர்ந்து 29.10.2021 ந்தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு என்னுடன், தாங்கள் காவல் குழுவினருடன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, கடலூர் அலுவலகத்திலிருந்து அரசு வாகனத்தில் புறப்பட்டு கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் தாலுக்கா, காட்டுமன்னார்கோயில், ஓமாம்புலியூர் ரோட்டு அருகே உள்ள TASMAC கடை எண்.2441க்கு மதியம் சுமார் 03.00 மணிக்கு சற்று தள்ளி வாகனத்தை நிறுத்தினோம். மேற்சொன்ன டாஸ்மாக் கடையானது காட்டுமன்னார்கோயில், ஓமாம்புலியூர் ரோட்டிற்கு கிழக்குபுறம் பார்த்து அமைந்துள்ளது. அந்த கடையுடன் இணைந்ததுபோல் மேலும் 2 டாஸ்மாக் கடைகள் அமைந்திருந்தன. அந்த டாஸ்மாக் கடைகளின் எண்கள் 2439, 2440 ஆகும். அப்போது அந்த டாஸ்மாக் கடை எண் 2441ல் வியாபாரம் நடந்துக்கொண்டிருந்தது. மேற்சொன்ன கடையிலிருந்து மதுபான வகைகளை வாங்கிக்கொண்டு திரும்பிய மதுபான பிரியர்களிடம் அவர்கள் வாங்கி வைத்துள்ள மதுபானத்தின் பெயர் மற்றும் விலை விவரம் கேட்டுத் தெரிந்துக்கொண்டேன். அதன்படி மதுபானத்தின் அரசு நிர்ணயித்த விற்பனை விலையை விட கூடுதலாக மது பாட்டில் ஒன்றுக்கு வகைக்கு தகுந்தாற்போல் ரூ.10/– முதல் ரூ.25/– வரை கூடுதலாக பணம் கொடுத்து வாங்கி வந்ததை தெரிவித்தார்கள். மேற்சொன்ன கூடுதல் விலை சம்மந்தமாக அவர்களை விசாரிக்க வழக்கம்போல் இப்படித்தான் கூடுதலாக பணம் கொடுத்து மதுவை வாங்கி வருவதாக பலர் தெரிவித்தனர். எனக்கு கிடைத்த தகவல் உறுதி செய்யப்பட்டது. பின்னர் 29.10.2021ந்தேதி மதியம் சுமார் 03.15 மணிக்கு துணை

30/10/2021

காவல் கண்காணிப்பாளர் மற்றும் ஆளிநர்களுடன் கடைக்கு உள்ளே சென்றேன். அப்போது அந்த கடையினுள் இரண்டு நபர்கள் வியாபாரம் செய்துக்கொண்டிருந்தனர் மற்றும் 3 நபர்கள் உடன் இருந்தனர், அவர்களை விசாரணை செய்தபோது 1) R.ரவிக்குமார், வயது 51, த/பெ, ராஜமாணிக்கம், டாஸ்மாக் மாவட்ட மேலாளர், கடலூர் மாவட்டம், வீட்டு முகவரி நெ.86, SV பட்டேல் சாலை, பண்டிச்சேரி, 2) A.மதியழகன், வயது 51, த/பெ, ஆறுமுகம், மேற்பார்வையாளர், கடை எண்.2441, வீட்டு முகவரி நெ.149, மெயின் ரோடு, வாழக்கொல்லை, வீராணம் ஏரிக்கரை, சிதம்பரம் தாலுக்கா, கடலூர் மாவட்டம், 3) P.அறிவழகன் வயது 44, த/பெ பட்டுசாமி, விற்பனையாளர், கடை எண்.2441, வீட்டு முகவரி நெ.2/172, மாரியம்மன்கோவில் தெரு, நாச்சியார்பேட்டை, ஸ்ரீமுஷ்ணம் தாலுக்கா, கடலூர் மாவட்டம், 4) S.ரமேஷ் வயது 44 த/பெ, சாரங்கபாணி, மேற்பார்வையாளர், கடை எண்.2439, வீட்டு முகவரி நெ. 6, அங்காளம்மன்கோயில் தெரு, வளையமாதேவி, புவனகிரி தாலுக்கா, கடலூர் மாவட்டம், 5) P.ரமேஷ், வயது 45, த/பெ பழமலை, இளநிலை உதவியாளர், மாவட்ட மேலாளர் அலுவலகம், கடலூர் மாவட்டம், வீட்டு முகவரி நெ.93, மாரியம்மன் கோவில் தெரு, பெரியகோட்டிமுலை, விருத்தாசலம், கடலூர் மாவட்டம் என்று தெரிவித்தனர். மேலும் அவர்களிடம் நான் மற்றும் என்னுடன் வந்த காவல் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் ஆளிநர்களை அலுவலக அடையாள அட்டையை காண்பித்தும், நாங்கள் திடீர் சோதனை செய்ய வந்துள்ள விவரத்தையும் தெரிவிக்கப்பட்டது. மேலும் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அவர்களது முன்னிலையில் சுய சோதனை செய்து காண்பித்து, குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை உறுதி செய்துக் கொண்டோம். அந்த TASMAC கடையானது சுமார் 12 x 12 அடி நீள அகலமுள்ள RCC பில்டிங் இரும்பு கிரில் கேட் போடப்பட்டிருந்தது. அந்த கட்டிடத்தின் முகப்பின் மேல் புறத்தின் TASMAC, கடை எண்.2441 என்று எழுதப்பட்டிருந்தது. கடையினுள் மதுபான வகைகள் பெட்டி பெட்டியாக, வகை வாரியாக அடுக்கி வைக்கப்பட்டும், சில பெட்டிகள் பிரித்தும் அதில் உள்ள மதுபாட்டில் வகைகள் விற்பனைக்கும் வைக்கப்பட்டு இருந்தது. அப்போது டாஸ்மாக் கடையிலிருந்த கடலூர் மாவட்ட மேலாளர் திரு.ரவிக்குமார் அவர்களை விசாரணை செய்ய ஒவ்வொரு நாளும் எந்தெந்த கடைகளை மேற்பார்வை செய்ய வேண்டும் என்ற விவரத்தினை திருச்சியில் உள்ள சீனியர் மண்டல மேலாளர் தனக்கு தெரிவிப்பார் என்றும், அதன்படி காட்டுமன்னார்கோயில் டாஸ்மாக் கடை எண்கள் 2439, 2440, 2441, குமராட்சி டாஸ்மாக் கடை எண்.2580 ஆகியவற்றினை மேற்பார்வை செய்வதற்காக புறப்பட்டு மதியம் 03.00 மணியவில் காட்டுமன்னார்கோயில் டாஸ்மாக் கடை எண்.2441 வந்து விற்பனை தொடர்பாக மேற்பார்வை செய்து கொண்டிருந்ததாகவும் தெரிவித்தார். தான் அலுவலகத்திலிருந்து சுமார் 11.30 மணிக்கு புறப்பட்டு TN 14 J 4851 Toyota Etios என்ற வாடகை காரில் வந்ததாகவும், காரை டிரைவர் பாபு என்பவர் ஓட்டிவந்ததாகவும் தெரிவித்தார். கடையின் முன்புறம் இருந்த காரை சோதனை செய்தபோது காரின் டிக்கியில் துணிப்பையில் பணம் வைக்கப்பட்டிருந்தது.

30/01/2021

அதில் இரண்டு 500 ரூபாய் கட்டுகள் இருந்தன. அதனை எண்ணிப்பார்க்க 1) 500x100= 50,000/-, 2) 500X98=49,000/- ஆக மொத்தம் ரூபாய் 99,000/- இருந்தன. அதனை பற்றி அவரிடம் கேட்க சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் டாஸ்மாக் மேற்பார்வையாளரிடமிருந்து கமிஷனாக பெறப்பட்ட பணம் எனக்கருதி மகசரில் கைப்பற்றப்பட்டது. காரின் டிரைவரை விசாரணை செய்ய தனது பெயர் பாபு வயது 50, த/பெ மயில்வாகணன், நெ.44, சரவணா நகர், திருப்பாதிரிப்புலியூர், கடலூர் மாவட்டம் என தெரிவித்தார். அந்த காரின் உரிமையாளர் பாஸ்கரன், த/பெ, செல்வராஜ், எண்.124, தங்கராஜ் நகர், திருப்பாதிரிப்புலியூர், கடலூர் என்றும், டாஸ்மாக் மாவட்ட மேலாளருக்கு வாடகையின் பேரில் காரை ஓட்டிவருவதாக தெரிவித்தார். காருக்கு ஒருநாள் வாடகையாக ரூ.1,600/– அதில் தனக்கு கூலியாக ரூ.600/– தருவதாக சொன்னார். P.ரமேஷ் இளநிலை உதவியாளர் என்பவரை விசாரணை செய்ய மாவட்ட மேலாளர் டாஸ்மாக் கடைகளை மேற்பார்வை செய்ய செல்லும்போது உதவிக்காக தானும் உடன் சென்று கடையில் பராமரிக்கப்படும் ஆவணங்களை சரிபார்க்க உதவி செய்வேன் என்றும் அதன்படி மாவட்ட மேலாளர் அறிவுறுத்தலின்படி காட்டுமன்னார்கோயிலில் உள்ள டாஸ்மாக் கடை எண்கள். 2439, 2440, 2441 ஆகிய கடைகளை மேற்பார்வை செய்ய வந்ததாகவும், தான் மாருதி ஆல்டோ 800 TN 91 U 4547 என்ற காரில் வந்ததாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரது சட்டைப்பையில் ரூபாய் 1000 இருந்தன, அதன் விவரம் 500X2=1000ம் இருந்தன. அந்த பணம் பற்றி அவரிடம் விசாரிக்க அவர் சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் டாஸ்மாக் கடையில் கமிஷனாக பெற்ற பணம் என கருதி மகஜரில் கைப்பற்றப்பட்டது. அவர் வந்த காரை சோதனை செய்ய காரில் கைப்பற்றக்கூடிய பொருட்கள் ஏதுமில்லை. சோதனை செய்த டாஸ்மாக் கடை எண்.2441லிருந்த மேற்பார்வையாளர் மதியழகன் என்பவரை சோதனை செய்ய அவரது சட்டைப்பையில் ரூபாய் 5,800/– பணம் இருந்தது, அந்த பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்க சரியான முகாந்திரம் கூறாததால் மதுபாட்டில்களை விற்பனை செய்யும்போது கூடுதல் தொகைக்கு விற்பனை செய்து அந்த தொகையினை வைத்திருக்க கூடும் எனக்கருதி மகசரில் கைப்பற்றப்பட்டது. சோதனை செய்த டாஸ்மாக் கடை எண்.2441 விற்பனையாளர் அறிவழகன் என்பவரை சோதனை செய்ய அவரது சட்டைப்பையில் ரூபாய் 9,500/– பணம் இருந்தது, அந்த பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்க சரியான முகாந்திரம் கூறாததால் மதுபாட்டில்களை விற்பனை செய்யும்போது கூடுதல் தொகைக்கு விற்பனை செய்து அந்த தொகையினை வைத்திருக்க கூடும் எனக்கருதி மகசரில் கைப்பற்றப்பட்டது. சோதனை செய்த டாஸ்மாக் கடை எண் 2441ல் இருந்த ரமேஷ் (கடை எண்.2439ன் மேற்பார்வையாளர்) அவரை விசாரணை செய்ய சோதனை செய்யப்படும் கடையில் விற்பனைக்கு உதவி செய்ய வந்ததாக கூறினார். அவரை சோதனை செய்ய அவரது சட்டைப்பையில் ரூபாய் 8,000/– பணம் இருந்தது, அந்த பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்க சரியான முகாந்திரம் கூறாததால் மதுபாட்டில்களை விற்பனை செய்யும்போது கூடுதல் தொகைக்கு விற்பனை செய்து அந்த தொகையினை வைத்திருக்க

30/10/2021

கூடும் எனக்கருதி மகசரில் கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து கடையில் இருந்த சூப்பர்வைசர் A.மதியழகன் மற்றும விற்பனையாளர், அறிவழகன் ஆகியோர் அவர்களது கடையின் (1) Attendance Register, (2)Form-V Stock cum Sale Register from 01.06.2020 to 15.07.2020 ஆகியவற்றை எடுத்துக் காண்பித்தார்கள். இருவரையும் அன்றைய விற்பனை தொடர்பாக விவரம் கேட்க, சோதனை செய்வதற்கு முன்பு வரை ரூ.1,22,860/– மதுபானம் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பதிவேடுகளை சரிபார்த்து தெரிவித்தனர். அவர்கள் முன்னிலையில் ஒரு அட்டை பெட்டியில் மதுபான விற்பனை செய்த பணம் வைக்கப்பட்டிருந்தது. மேலும் அப்பணத்தை எனது முன்னிலையில் அவர்கள் கணக்கீடு செய்ததில் மேற்சொன்ன இன்றைய விற்பனை தொகையுடன் சரியாக இருந்தது. மேலும் விற்பனை பணம் ரூ.1,22,860/– ஐ ஆய்வுக்கு பின் மேற்சொன்ன சூப்பர்வைசர் மதியழகன் மற்றும் விற்பனையாளர் அறிவழகன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து (1)கடை எண்.2441 ன் Attendance Register (2) கடை எண்.2441 ன் Form-V Stock cum Sale Register, (3) கடை எண்.2439ன் மாவட்ட மேலாளர் டாஸ்மாக் / தணிக்கை அலுவலர் அவர்கள் தணிக்கை செய்த படிவம் நாள்.29.10.2021 மொத்தம் 9 தனித்தாள்கள் கொண்ட கோப்பு, (4) கடை எண்.2440ன் மாவட்ட மேலாளர் டாஸ்மாக் / தணிக்கை அலுவலர் அவர்கள் தணிக்கை செய்த படிவம் நாள்.29.10.2021 மொத்தம் 9 தனித்தாள்கள் கொண்ட கோப்பு, (5) கடை எண்.2441, மாவட்ட மேலாளர் டாஸ்மாக் / தணிக்கை அலுவலர் அவர்கள் தணிக்கை செய்த படிவம் நாள்.29.10.2021 மொத்தம் 8 தனித்தாள்கள் கொண்ட கோப்பு, (6) TN 14 J 4851 Totyota Etios காரின் Copy of permit / Registration Certificate and other related documents total pages 9 ஆகியவற்றை மற்றும் கணக்கில் வராத பணம் ரூபாய் 1,23,300/– மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜர் மதியம் சுமார் 03.15 மணி முதல் சுமார் இரவு 07.00 மணிக்கு முடிக்கப்பட்டது (29.10.2021). மேலும் சோதனையின்போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் மற்றும் அவர்களது குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. மேலும் எங்களது மேற்படி ஆய்வின்போது, மேற்சொன்ன டாஸ்மாக் கடையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு, சம்பவ இடத்தில் இருந்த இதர நபர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை. மேலும் கொரானா கால முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முககவசம் அணிந்தும் மற்றும் அனைத்தும் முறையாக கடைபிடிக்கப்பட்டது. உத்திரவுப்படி இன்று 30.10.2021ந் தேதி காலை 10.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து, 29.10.2021ந்தேதி கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் தாலுக்கா, காட்டுமன்னார்கோயில், TASMAC கடை எண்.2441 ல் மேற்கொண்ட திடீர் ஆய்வு சம்மந்தமாக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டி, திடீர் ஆய்வின்போது தயார் செய்யப்பட்ட அசல் திடீர் ஆய்வு மகஜர்,

30/10/2021

ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,23,300/–, திடீர் ஆய்வு மகஜரில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களை இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன். மேலும் இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள (ஒப்பம்.........) (அ. அமுதா) துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம். அய்யா, நான் இன்று 30.10.2021ந் தேதி காலை 10.30 மணிக்கு வாதியின் புகார் மனுவை பெற்று, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.14/2021, சட்டபிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 மற்றும் 102 குற்ற விசாரணை முறை சட்டம், 1973 சட்டங்களின் படி வழக்கு பதிவு செய்தேன். இதன் அசலை, வாதியின் புகார் மனுவுடன் இணைத்து, கணம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

30/10/21

E.S.J. MELWYN RAJASINGH

DSP, V & AC

CUDDALORE.